





# கண்டன ஆர்ப்பாட்டம்

**சனவரி 7 2022, வெள்ளி – காலை 10 மணி – செஞ்சிலுவைச் சங்கம் அருகில்**

## கோவை சுந்தராபுரம் ஃபிம்ஸ் (FIMS) மருத்துவமனை செய்த குற்றங்கள், மோசடிகள் கொலை, கொள்ளை, உறுப்புத் திருட்டு! தமிழக அரசே, நடவடிக்கை எடு!

கொரோனா பெருந்தொற்றிலிருந்து நாம் இன்னும் முழுமையாக மீண்டுவிட வில்லை என்று தமிழ்நாடு மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சர் அறிக்கையிட்டுள்ளார். அது மட்டுமன்று, கொரோனா மூன்றாம் அலை விரைவாகப் பரவி வருகிறது என்றும் எச்சரித்துள்ளார். நாம் ஒவ்வொருவரும் எச்சரிக்கை காப்போம்!

கடந்த காலத்தில் நம் மக்கள் கொரோனாவின் பிடியில் விழுந்து உயிர்களையும் வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் இழந்த துயரம் மிகப்பெரிது. இந்தத் துயரத்தைப் பயன்படுத்தி பெருங்குழுமத் தனியார் மருத்துவமனைகள் அடித்த கொள்ளை பற்றி ஏராளமான செய்திகள் வந்தன. நோயாளிகளும் அவர்களின் உறவினர்களும் பல முறைப்பாடுகள் செய்தனர்.

கொரோனாவைக் கொண்டு கொள்ளையடித்த இந்தத் தனியார் மருத்துவமனைகளில் ஒன்றாகிய கோவை சுந்தராபுரத்தில் உள்ள ஃபிம்ஸ் மருத்துவமனை செய்த முறைகேடுகள் பற்றி வந்துள்ள நம்பகமான குற்றச்சாட்டுகள் அதிர்ச்சியளிக்கக் கூடியவை.

ரேஷ்மிகா மருத்துவமனைகள் குழுமத்தைச் சேர்ந்ததென்று சொல்லப்படும் இந்த ஃபிம்ஸ் மருத்துவமனைக்குச் சென்ற நோயாளிகள் பெரும் மோசடிகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள். கணவனை இழந்த மனைவி, அப்பாவை இழந்த மகள், அம்மாவை இழந்த மகன், தம்பியை இழந்த அக்கா இப்படி உறவுகளை இழந்து, கூடுதலாகப் பண மோசடிகளுக்கும் ஆளான பலரும் இந்த மருத்துவமனை நிர்வாகத்தின் கொடுங்குற்றங்களுக்குச் சான்றளிக்க அணியமாய் உள்ளனர். மருத்துவமனை நிர்வாகத்தின் பண மோசடி, உறுப்புத் திருட்டு உள்ளிட்ட குற்றங்களுக்கு மருத்துவர்களும் உடந்தையாகச் செயல்பட்டுள்ளனர்..

பிம்ஸ் மருத்துவமனையில் கொரானாவால் பாதிக்கப்பட்ட சில செவிலியர்களே மருத்துவம் அளித்தனர். நோயாளி குறித்து உறவினர்களில் பொறுப்பான ஒருவருக்கேனும் வெளிப்படையான நோய்நிலை குறித்துத் தெரிவிப்பதில்லை என்பதையே வழமையாகக் கொண்டுள்ளனர்.

நோயாளிகளுக்குச் செலுத்த வேண்டுமென்று சொல்லி ரெம்டெசிவிர் (**Remdesivir**) மருந்துக்கு ரூபாய் 50,000 முதல் 80,000 வரை நோயாளிகளின் உறவினர்களிடம் மருத்துவமனை நிர்வாகம் பேரம் பேசுகிறது.

ஃபிம்ஸ் மருத்துவமனையில் நோயாளிகளின் நகைகள் திருட்டுப் போவது தொடர்பான முறைப்பாடு ஒன்றில் காவல்துறையிலிருந்து மருத்துவத் துறை இணை இயக்குனருக்கும், அவரிடமிருந்து காவல் துறைக்குமாக மாறி மாறிப் பல மாதம் அலையவிட்டுப் போக்குக் காட்டி அவர்களுக்குப் பெரும் மனஉளைச்சல் ஏற்படுத்தி இறுதியில் முறைப்பாட்டை விலக்கிக் கொள்ளுமாறு செய்துள்ளனர்.

ஃபிம்ஸ் மருத்துவமனையின் தொடர் மோசடிகளுக்கு ஆளானோர் அடுத்து நம்பிச் செல்லுமிடம் போத்தனூர் காவல் நிலையம்தான். அக்காவல்நிலையத்தின் முன்புறப் பதாகையில் போத்தனூர் காவல் நிலையப் பெயரை விட மிகப் பெரிய எழுத்துகளில் ஃபிம்ஸ் மருத்துவமனையின் பெயரே உள்ளது. ஃபிம்ஸ் மருத்துவமனையில் இறந்த நோயாளர்களின் உறவினர்கள் அம்மருத்துவமனையின் முறைகேடுகளைப் பற்றி முறையிட வந்தால் போத்தனூர் காவல் உதவி ஆய்வாளர் முருகேஷ் அந்த முறைப்பாடுகளை ஏற்பதில்லை என்பதோடு அவர்களை மிரட்டியும் அனுப்பி விடுவதாகச் சொல்லப்படுகிறது. அதே காவல் அதிகாரி முருகேஷ் பிம்ஸ் மருத்துவமனை மேலாண்மையைச் சார்ந்தோர் காவல் நிலையத்திற்குள் வந்தால் அவர்களை விருந்தாளிகளைப் போல் விழுந்து விழுந்து கவனித்துக் கொள்கிறார் என்றும் சொல்லப்படுகிறது. முறையிட வந்தோரிடம் மருத்துவமனை சார்பில் பேரம் பேசவும் செய்கிறாராம். முறையிட வந்த ஒருவரின் அலைபேசியைப் பிடுங்கித் தூக்கி எறிந்து உடைத்தும் விட்டாராம்.

வெகுசிலர் மட்டுமே நீதி வேண்டிப் பல மாத காலம் அலைந்து திரிந்து மாவட்ட ஆட்சியர், மாவட்டக் காவல் ஆணையர், தமிழ்நாடு காவல்துறைத் தலைமை இயக்குநர், மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர், முதலமைச்சர் வரை சென்று முறைப்பாடு அளித்துள்ளனர். இதுபோன்ற முறைப்பாடுகளுடன் வருபவர்களை மிரட்டி அனுப்புவது அல்லது மீறி உயர்மட்டம் வரை முறையீடு செய்கின்றார்கள் என்றால் அவர்களின் கண்துடைப்பிற்காக பிம்ஸ் மருத்துவனையின் கொரானா உரிமத்தை நீக்கிவிட்டதாகக் கூறி அவர்களின் முயற்சிகளைத் தடுக்கின்றனர். ஆனால் இன்று வரை அங்கு கொரானா சிகிச்சை என்ற ஒன்று நடந்தே வருகிறது. மோசடிகளும் தொடர்கின்றன.

**தமிழக அரசே!**

**கோவை சுந்தராபுரத்தில் உள்ள ஃபிம்ஸ் மருத்துவமனை மீது நோயாளிகள் கொலை, உறுப்புத் திருட்டு, மருந்து கள்ள வணிகம் போன்ற கடுமையான குற்றச்சாட்டுகள் பொதுவெளியில் எழுந்திருப்பதால் அந்த மருத்துவமனைக்கான உரிமத்தை நீக்கம் செய்து, அம்மருத்துவமனையை உடனடியாக இழுத்து மூடி, அங்குள்ள நோயாளிகளை அரசு மருத்துவமனைக்கோ அவர்கள் விரும்பும் வேறு மருத்துவமனைகளுக்கோ மாற்ற வேண்டும்.**

**ஃபிம்ஸ் மருத்துவமனை மீதான குற்றச்சாட்டுகளைப் புலனாய்வு செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை மாநில சி.பி.சி.ஐ.டி வசம் ஒப்படைக்க வேண்டும்.**

**ஃபிம்ஸ் மருத்துவமனை மீது வந்த முறைப்பாடுகள் குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்காத மருத்துவத் துறை அதிகாரிகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

**ஃபிம்ஸ் மருத்துவமனை மீது தரப்படும் முறைப்பாடுகளை வாங்க மறுத்தும், முறைப்பாடு செய்தவர்களை மிரட்டியும் குற்றவாளிகளுக்காக அவர்களோடு பேரமும் பேசிய போத்தனூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் முருகேஷை உடனடியாகப் பணிநீக்கம் செய்யவும், அவருக்கு மேலேயும் கீழேயும் அவருக்கு உடந்தையாக இருந்த மற்றக் காவல் அதிகாரிகள் மீதும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்!**

**ஃபிம்ஸ் மருத்துவமனை மீதான முறைப்பாடுகள் குறித்து உயர் மருத்துவக் குழு அமைத்து விசாரணை செய்ய வேண்டும்.**

**தலைமை**

வழக்கறிஞர் **தி.சுதாகாந்தி**
இளைஞர் அரண்

**கண்டன உரை**

**ஹென்றி திபேன்**
நிர்வாக இயக்குநர் – மக்கள் கண்காணிப்பகம்

**கு.இராமகிருட்டிணன்**
பொதுச் செயலாளர் – தந்தை பெரியார் திராவிட கழகம்

**கொளத்தூர் மணி**
தலைவர் – திராவிடர் விடுதலைக் கழகம்

**தோழர் தியாகு**
பொதுச் செயலாளர் – தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

**கோவை ரவிக்குமார்**
பொதுச் செயலாளர் – ஆதித் தமிழர் பேரவை

வழக்கறிஞர் **சத்தியபாலன்**
தேசிய மனித உரிமை அமைப்புகளின் கூட்டமைப்பு

**ஜோ. இலக்கியன்**
மாநகர் மாவட்டச் செயலாளர் – விடுதலைச் சிறுத்தைகள் கட்சி

**இராவணன்**
கோவை மாவட்டச் செயலாளர் – தமிழ்ப் புலிகள் கட்சி

**நந்தன் தம்பி**
மாவட்டச் செயலாளர் – திராவிடத் தமிழர் கட்சி

**ராஜன்**
மாவட்ட ஒருங்கிணைப்பாளர் – மக்கள் அதிகாரம்

**பார்த்திபன்**
ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம்

**மூர்த்தி**
மண்டல ஒருங்கிணைப்பாளர் – மக்கள் அதிகாரம்

**சு. அகத்தியன்**
நிறுவனத் தலைவர் – தமிழ்ச் சிறுத்தைகள் கட்சி

**மலரவன்**
புரட்சிகர இளைஞர் முன்னணி

**சுஜித் ராஜா**
மாவட்டச் செயலாளர் – சிபிஐஎம்எல் ( ரெட் ஸ்டார் )

**ப.கணபதி**
ஒருங்கிணைப்பாளர் – சாதி ஒழிப்பு விடுதலை முன்னணி

வழக்கறிஞர் **மதி அம்பேத்கர்**
மாநிலச் செயற்குழு உறுப்பினர் – வெல்ஃபர் கட்சி

**சிகா மார்க்ஸ்**
மாவட்டச் செயலாளர் – மக்கள் சனநாயகக் குடியரசு கட்சி